Registered as a Newspaper in Ceylon

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (25-3-66) இதழ் 46

விசுவாவசு பங்குனி 12 துல்ஹஜ் பிறை 2 வெள்ளிக்கிழமை

பட்டு உடைகளை சாயம் போடுவதும் றைக்கிளீன் செய்வதும்



சன்லைட் டையோர்ஸ் அன் றைகிளீனேர்ஸ்

(ராணித்தியேட்டருக்கு அருகாமை)

பெரியகடை யாழ்ப்பாணம்.

போன்: 474. தந்தி: றைக்கிளீன்

## மட்டக்களப்பு மாநகரசபை கமிஷன் அறிக்கை

கொழும்பு, வியாழன்

மட்டக்களப்பு நகரசபைக்கு மாநகரசபை அந்தஸ்து அளிப்பது பற்றி விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி நியமிக்கப்பட்ட கமிஷன் தனது அறிக்கையை இன்று ஸ்தல ஸ்தாபன மந்திரி செனட்டர் திருச்செல்வத்திடம் சமர்ப்பித்தது. உத்தேச மட்டக்களப்பு மாநகரசபை 21 வட்டாரங்களைக் கொண்டிருக்க வேண்டும் என்று கமிஷன் தனது அறிக்கையில் சமர்ப்பித்துள்ளது.

# யாழ். மேயர் பதவி இழந்தார்

## புதிய மேயர் 31-ல் தெரிவு

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் மாநகரசபையின் புதிய மேயர், இம்மாதம் 31-ந் தேதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு, மாநகரசபை கமிஷனர் திரு. ஹட்சன் செல்வராசா தலைமையில் நடைபெறும் விசேஷ கூட்டத்தில் தெரிவுசெய்யப்படுவார்.

யாழ். மாநகரசபையைப் பொறுத்தமட்டில் கடந்த மூன்று வருடகால தவணையில், மூன்று மேயர்கள்பதவி வகித்துள்ளார்கள். முதலில்திரு.ரி. எஸ். துரைராசா மேயரானார். அதன் பின்னர் திரு. எஸ். மகாதேவா மேயராகத் தெரிவு செய்யப்பட்டார். இதன்பின்னர் திரு. எஸ். நாகராசா இவ்வருடம் ஜனவரி மாதம் 8-ந் தேதி மேயராகத் தெரிவு செய்யப்பட்டார். திரு. நாகராசா மீது நிறைவேற்றப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் தொடர்ந்து அடுத்தவாரம் புதிய மேயர் தெரிவு நடைபெறவிருக்கிறது.

### தீர்மானம ஊர்ஜிதம

யாழ்ப்பாணம்மேயர் திரு. சி. நாகராசாமீது ஏற்கனவே கொண்டுவந்து நிறைவேற்றப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் நேற்றுக்காலை மாநகரசபை கமிஷனர் திரு. ஹட்சன் செல்வராசா தலைமையில் நடைபெற்ற விசேஷ கூட்டத்தில் ஊர்ஜிதம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து திரு. நாகராஜா தமது மேயர் பதவியை இழந்துள்ளார். இக்கூட்டம் ஆறரை நிமிடங்களில் முடிவடைந்தது.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஊர்ஜிதம் செய்யும் தீர்மானத்தை திரு. ரி.எஸ். துரைராஜா பிரேரிக்க திரு.

(6-ம் பக்கம் பார்க்க)

## சேர். ஜோன் புதிய கவர்னர்ஜெனரல்?

கொழும்பு,வியாழன்

முன்னாள் பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவல புதிய கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்படுவது அநேகமாகத் திடமாகிவிட்டதாக நம்பிக்கையான அரசியல் வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

நேற்றுமுன்தினம் செனட் சபைத் தலைவர் திரு. ஏ. ரத்நாயகா முதுபெரும் அரசியல் வாதிகளுக்கு அளித்த விருந்துபசாரம் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. அச்சமயம் பல அரசியல் தலைவர்கள் தனிமையாக திரு ரத்நாயகாவுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தினர். அதன் பின்னர் பிரமுகர்கள் சேர் ஜோன் கொத்தலாவலைக்கு வாழ்த்துத் தெரிவித்ததாகவும் தெரியவருகிறது.

இந்த விருந்துபசாரத்தில் திருவாளர்கள் இ. ஏ. நுகவெல; எட்மன்ட் விக்கிரமசிங்கா, ரி.பி.பானபொக்க, ஷெல்டன் ஜெயசிங்கா, மந்திரி வி.ஏ. சுகததாசா, சேர் ஜோன் கொத்தலாவல,சேர் அல்பேர்ட்பீரிஸ், சேர் சிறில் டி. சொய்சா ஆகியோர் கலந்துகொண்டனர்.

தற்பொழுது மாதேசாதிபதியாகக் கடமையாற்றிக் கொண்டிருக்கும் திரு.வில்லியம் கோபல்லவா தமதுபதவியிலிருந்து இளைப்பாறுவதற்கான விருப்பத்தை பிரதம மந்திரிக்கு தெரிவித்துள்ளாரென்றும், தற்பொழுது வெளிநாடு சென்றுள்ள பிரதமர் திரு. டட்லி சேனநாயகா இலங்கை திரும்பியதும் மே மாதம் வெசாக் வைபவத்துடன் புதிய மாதேசாதிபதி நியமனம் செய்யப்படுவார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

"யுத்தநிறுத்த எல்லைக்கோடு

## அடிப்படையில் பிரிவினைக்கு இணங்கோம்"

### காஷ்மீர்பற்றி இந்தியப் பிரதமர் ஸ்ரீமதி காந்தி அறிவிப்பு

புதுடில்லி, மார்ச் 24

தற்போதைய காஷ்மீர் யுத்த நிறுத்த எல்லைக்கோட்டை அடிப்படையாகக்கொண்ட பிரிவினை எதற்கும் இந்தியா இணங்காது என பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தி தெரிவித்திருக்கிறார்.

இந்த யோசனைக்கு மீண்டும் யோசனை எதுவும் இந்தியாவுக்கு இல்லை என்றும் இவ்விஷயத்தில், எந்த ஒரு தலைப்பட்ட யோசனைக்கும் இந்தியா சம்மதிக்காது என்றும் அவர் கூறினார்.

பாரிஸில் ஜெனரல் டிகாலுடன் தாம் நடத்தவிருக்கும் சம்பாஷணைக்கு நிகழ்ச்சிநிரல் எதுவும் கிடையாதுஎன்றும்ஸ்ரீமதிஇந்திரா கூறினார். ஆனால் ஆசியா உட்பட சர்வதேச பிரச்னைகளை பற்றித் தாம் பேசவிருப்பதாய் அவர் கூறினார்.

வடவியட்னாமையும் அமெரிக்காவையும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு ஒன்றாகக் கொண்டுவரும் சந்தர்ப்பம் இப்போது இருக்கவில்லை என்றும் அவர் கூறினார். வியட்னாமில் மத்தியஸ்தத்துக்கான வாய்ப்பு எதையும் தாம் காணவில்லை என்றும் ஸ்ரீமதி இந்திரா குறிப்பிட்டார்.

சர்வதேச விவகாரங்களில் பிரான்சுடன் தொடர்பு கொண்டிருப்பது இந்தியாவுக்கு மிக முக்கியமானது என்றும் ஸ்ரீமதி காந்தி கூறினார்.

## சுவீப் அதிர்ஷ்டசாலிகள்

திருக்கோணமலை,வெள்ளி

திருக்கோணமலையில் நேற்றுமாலை இழுக்கப்பட்ட 82-வது தொடர்ச்சி தேசிய சுவீப் சீட்டிழுப்பில் முதல் மூன்று பரிசுகள் பெறும் டிக்கட்டுகள் வருமாறு:-

முதலாவது பரிசு

37 X 0960 ரூ. 1 லட்சம்

இரண்டாவது பரிசு

04 P 0261 ரூ 40 000

மூன்ருவது பரிசு

50 D 0081 ரூ. 10,000

## இந்துப் பல்கலைக்கழகம் பற்றி தமிழ்க் காங்கிரஸ் ஆராயும்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணத்தில் ஒரு இந்து பல்கலைக் கழகம் நிறுவவேண்டுமென அரசாங்கத்தை வலியுறுத்துவதற்கு, இம்மாதம் 29-ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறும் தமிழ் காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில், மூவர் கொண்ட ஒரு கமிட்டி தெரிவு செய்யப்படுமென அறியப்படுகிறது.

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில், அடுத்த மாதம் நடுப்பகுதியில் வவுனியாவில் நடைபெறவிருக்கும் வருடாந்த மகாநாட்டு ஒழுங்குகள் பற்றி ஆலோசிக்கப்படுவதோடு, மகாநாட்டிற்கான திகதிகள் நிர்ணயிக்கப்படும்.

தமிழ் பகுதிகளி[illegible] த்தி சம்பந்தமாக வவுனியா எம் பி. திரு.ரீ. சிவசிதம்பரம் தயாரித்துள்ள திட்டங்கள் பற்றி இக் கூட்டத்தில் பரிசீலனை செய்யப்படும். இத் திட்டங்களை பின்னர் ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவிடம் சமர்ப்பிக்கப்படும்.

இந்து பல்கலைக் கழகம் பற்றி ஒரு முக்கிய தீர்மானம் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்படுவதோடு, இந்து பல்கலைக்கழகத்தின் அவசியத்தைப் பற்றி திரு. பொன்னம்பலம் உரையாற்றுவார் என்றும் தெரியவருகிறது.

### மந்திரி திருச்செல்வம் இன்று வருகிறார்

நல்லூர், வெள்ளி

உள்ளூராட்சி அமைச்சர் திரு. [illegible] இன்று காலை உத்தியோகபூர்வமாக யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவிருக்கிறார்.

## வட பகுதிக்கு உணவுமந்திரி விஜயம்

### உப உணவு உற்பத்தி பற்றி ஆராய்வார்

நல்லூர், வெள்ளி

வடபகுதியில் உணவு உற்பத்திநிலையை நேரில் கண்டறியும்பொருட்டு உணவு மந்திரி திரு. எம். டி. பண்டா அடுத்த மாதம் 5-ம் திகதி யாழ்ப்பாணம் வரவிருக்கிறார் என்றும் யாழ்ப்பாணத்தில் இரண்டு தினங்கள் தங்கியிருக்கும் அமைச்சர் உபஉணவுப் பொருட்களை யாழ்ப்பாணத்தில் பயிரிடும் வகையில் இப்பகுதி விவசாயிகளின் ஆதரவைக் கோருவார் என்றும் தெரிகின்றது.

அடுத்த மாதம் 5-ம் திகதி காலை விமானமூலம் பலாலி வந்துசேரும் அமைச்சருக்கு அளிக்கப்படும் பகிரங்கவரவேற்பினைத் தொடர்ந்து காங்கேசன்துறை விருந்தினர் விடுதி செல்வார் என்றும் பின்னர் தெல்லிப்பழை அம்பனை கமவெளியிலும், அளவெட்டி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்திலும், அளவெட்டிதோட்டவெளியிலும் விவசாயிகளால் அளிக்கப்படும் வரவேற்பிற் கலந்து உரையாடுவார் என்றும் அறியப்படுகின்றது.

சங்கானை, திருநெல்வேலி, ஆவரங்கால், சாவகச்சேரி ஆகிய இடங்களுக்கும் அன்றைய தினம் உணவுமந்திரி விஜயஞ்செய்வதுடன் ப[illegible]

(6-ம் பக்கம் பார்க்க)

## ஆயிரம் நெசவுப்பயிற்சி நிலையங்கள் நிறுவப்படும்

### அரசாங்கத்தின் முன்னேற்ற திட்டங்கள் பற்றி எம்.பி.

சாவகச்சேரி, வியாழன்

'நமது நாட்டின் பொருளாதார விருத்தியை மேலோங்கச் செய்யுமுகமாக தேசிய அரசாங்கம் விவசாயம், கைத்தொழில் அபிவிருத்தியை முடியுமானவரை முன்னேற்றுவதற்கு வழிவகை செய்துவருகிறது. அத்தகைய திட்டங்களில் ஒன்றே இலங்கையில் ஆயிரம் நெசவுப் பயிற்சிநிலையங்களை ஸ்தாபிப்பதற்கான ஆக்கவேலைகள் செய்து கொண்டுவருவது' இவ்வாறு சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் சரசாலை ஸ்ரீகணேச வித்தியாலயத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

தற்பெருமை கொள்ளவேண்டாம். தாழ்மை, சேவை, கருணை இவைதான் சமயவாழ்விலே முக்கியமாகும். உலக மயக்கங்களுக்கிடையே சத்தியமும் அன்புமான வாழ்க்கையே ஆத்மீக வாழ்வின் வெற்றிக்கான ரகசியமுமாகும்.

—குரு நானக்


# ஈழநாடு

EELA NADU; National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 329

விசுவாவசு ஆண்டு பங்குனி மீ 12 உ (25-3-66)


## இந்தியா-பாகிஸ்தான் உறவுகள்

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே சென்ற சில நாட்களாக உறவுகள், டாஷ்கண்ட் ஒப்பந்தத்துக்கு மாறாக மோசமடைந்து வருவது கவலை அளிப்பதாகும். இவ்விரு நாடுகளுக்கு மிடையே பிரகடனம் செய்யப்படாத யுத்தம் ஏற்பட்டு, இருதேச மக்களுக்கும் பெரும் கஷ்ட நஷ்டங்கள் விளைந்தன. யுத்தம் நீடித்திருப்பின் இரண்டும் நாசமாகி அரசியல் சுதந்திரத்தையும் இழந்திருக்கும். நல்லவேளையாக இருதேசத் தலைவர்களும் இதை உணர்ந்து, டாஷ்கண்டில் கூடி ஒரு சமரச ஒப்பந்த மூலம் யுத்தநிறுத்தத்துக்கும் புதிய நல்லுறவுகளுக்கும் வழிவகுத்தனர்.

டாஷ்கண்ட் ஒப்பந்தம் இருதேசச் சண்டையையும் நிறுத்தியதென்றாலும் காஷ்மீர் உள்ளிட்டுப் பல பிரச்னைகள் தீர்க்கப்படவில்லை என்பது உண்மை. இருதரப்புத் தலைவர்களும் நேரில் கலந்து பேசி, பரஸ்பரம் நல்லுணர்ச்சியுடன் ஒத்துழைப்பதாயின் எல்லாப்பிரச்னைகளுக்கும் அமைதியான முறையில் நல்ல முடிவு காண முடியுமென்று நம்பப்பட்டது. துவேஷப் பிரசாரங்களை நிறுத்தி, நட்பையும் நல்லுறவையும் வளர்க்கக் கூடிய முறையில் இருதரப்பினரும் காரியங்கள் செய்ய வேண்டுமென்றும் ஒப்பந்தம் திட்டவட்டமாகக் கூறியிருந்தும் அதை பாகிஸ்தான் கௌரவிக்கவில்லை என்று இந்தியா குற்றஞ் சாட்டியுள்ளது.

டாஷ்கண்ட் ஒப்பந்தம் ஏற்பட்டதை விரும்பாத சில வெளியார்களும், இருதேசங்களுக்கும் மித்ர பேதம் ஏற்படும்படியாக விஷமம் செய்வதையும் பார்க்கிறோம்.

இரு தேசத்தலைவர்களும் கூடிப்பேசி, இவ்வித விஷமங்களுக்கும் புகார்களுக்கும் இடமேற்படாமல் வெகு கவனமாகப் பார்த்துக் கொண்டாலே, இருதேசங்களுக்கிடையே சமாதானம்பலப்படவும், பிரச்னைகள் சுமுகமாகத் தீரவும் முடியும்.

டாஷ்கண்ட் பிரகடனத்தை இந்தியா ஒரு சர்வதேச ஒப்பந்தமாக ஐக்கியநாடுகள் ஸ்தாபனத்தில் இரு நாட்களுக்கு முன் பதிவு செய்தது. பாகிஸ்தானும் சேர்ந்து இதைப் பதிவு செய்திருப்பின் பல விதங்களிலும் அது விரும்பத்தக்கதாக இருந்திருக்கும். இந்தியா இவ்வித யோசனை கூறியும் பாகிஸ்தான் எக்காரணம் பற்றியோ இதற்கு இணங்கவில்லை. ஆகவே தனிப்பட்டமுறையில் இந்தியா இவ்விதம் செய்ய நேரிட்டது. என்றாலும் அந்தவைபவத்தின்போது ஐ. நா. காரியதரிசியின் அழைப்பின்மீது பாகிஸ்தான் பிரதிநிதியும், ரஷ்ய பிரதிநிதியும் சமுகமளித்தது குறிப்பிடத்தக்கது. இரு தேசங்களுக்கு மிடையே ஏற்படும் பிரச்னைகளை சண்டைகளோ, வெளிநாட்டு ஆயுதங்களோ தீர்க்கமுடியாதென்பதையும், சண்டையால் இருநாடுகளுக்கும் நாசம்தான் என்பதையும், சென்றயுத்தத்தால் ஏற்பட்ட அனுபவங்கள் நன்கு அறிவுறுத்தி விட்டன. அதன்பயனாகவே டாஷ்கண்ட் ஒப்பந்தமும் ஏற்படமுடிந்தது. சரித்திரமுக்கியம் வாய்ந்ததும், ஆசியாவின் அமைதியைத் பாதுகாத்ததுமான டாஷ்கண்ட் ஒப்பந்தத்தை முறித்து, இருநாடுகளுக்கும் சண்டைமூட்டிவிட சில சுயநலமிகள் முற்பட்டிருப்பது பகிரங்க ரகசியம். இவ்விஷயத்தில் இருதேசத் தலைவர்களும் அதிக கவனமாக இருந்து, இந்த விஷமங்களுக்குச் சற்றும் இடமளிக்க மாட்டார்கள் என்றே நம்புகிறோம். நிலைமை மோசமாகாமலும் இரு தேச உறவுகளும் பலப்பட்டு, எல்லாப் பிரச்னைகளும் சுமுகமாகத் திரும்படியும் பார்த்துக் கொள்ளவேண்டியபொறுப்பு இருதேசத் தலைவர்களுக்குமுண்டு.

## யாழ்ப்பாண மேயர் பதவி

யாழ்ப்பாண மேயர்மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் நேற்று இரண்டாம் முறை நிறைவேற ஊர்ஜிதமாயிற்று. இது எதிர்பார்க்கப்பட்டதே. இவ்விஷயத்தில் நமக்கு எவ்வித விருப்பு வெறுப்புகளோ, கட்சி அல்லது தனிப்பட்ட பற்றுதல்களோ சிறிதும் கிடையாது. இலங்கையிலே இரண்டாவது பெரிய நகரமான யாழ்ப்பாணத்தின் கௌரவத்தையும், நன்மையையும் காக்க வேண்டுமென்பதும், புதிதாக யார் மேயராக வந்தாலும் அவருக்கும் இவ்விதம் ஏற்படக் கூடாதென்பதுமே நமது கவலை. மேயர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானங்களை அடிக்கடி கொண்டுவருவது நமது நகரின் மதிப்பையுயர்த்தவோ மாநகர சபை நிர்வாகத்தை மேம்படுத்தவோ சற்றும் உதவ முடியாது.

இவ்வித நிலைமை யாழ்ப்பாணத்துக்கு மட்டுமன்றி இத்தீவிலே வேறு பல நகரங்களுக்கும் பன்முறை ஏற்பட்டிருக்கின்றது. இதற்கான காரணங்களை ஆராய்ந்து, கூடுமானவரை இவ்விதம் ஏற்படாமல் தடுக்க ஸ்தலஸ்தாபனச் சட்டத்தில் தக்க திருத்தங்களைச்செய்ய வேண்டும். நம்பிக்கையில்லாத்தீர்மானத்துக்குமுன்றில் இரண்டு பங்கினரின் ஆதரவாவது வேண்டுமென்று சட்டம் செய்வதாயின் மேயர் பதவிக்கு இவ்வித நித்யகண்டமிராது. மேயர் சற்றே நிம்மதியான மனமுடன் இருந்து நகருக்கு ஏதாவது உருப்படியான நன்மைசெய்யமுடியும். யாழ்ப்பாணத்தின் புதிய மேயர் யாராயினும், அவராவது அதிக ஸ்திரமாக, நிம்மதியாகக் கடமை பார்த்து, நிர்வாக ஊழல்களை நீக்கி, நகரை அபிவிருத்தி செய்யக்கூடியதாக இருக்கவேண்டுமென்று நகரின் பொது மக்கள் அவாவுடன் எதிர்பார்க்கின்றார்கள்.

ஆசிரியருக்குக் கடிதம்

## தமிழ்ப் பல்கலைக்கழகமே வேண்டும்

இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் தமிழ்ப் பல்கலைக் கழகமொன்று நிறுவ வேண்டுமென்று கோரியிருப்பது வரவேற்கத் தக்கது

இலங்கை வாழ் தமிழர் இந்துக்களாவும், கத்தோலிக்கராகவும், கிறிஸ்தவர்களாகவும், முஸ்லிம்களாகவும் உள்ள காரணத்தினால் இச்சமயத்தினர் அனைவரும் பயன்பெறத்தக்க வகையில் சமயச் சார்பற்ற ஒரு பல்கலைக்கழகம் முதலில் நிறுவப்பட வேண்டும் நாளடைவில் இப்பல்கலைக் கழகமானது தமிழினத்தின் பண்பாட்டினை சமய அடிப்படையில் வளம்படுத்தவும் இயலும். தமிழ் மக்கள் கைக்கொள்ளும் ஒவ்வொரு மதத்துறையிலும் அறிவையும் ஆராய்ச்சியையும் பல்கலைக்கழக ரீதியில் வளர்ப்பதற்கு இங்கு வசதிகள் வழங்கப்படின், மத அடிப்படையில் பண்பாடு மலர்ச்சி அடைவதுடன், நாட்டில் சாந்தியையும் சமாதானத்தையும் அளிக்கவல்ல சமய சமரச மனப்பான்மையும் மேலாங்கும்.

''தமிழ்ப் பல்கலைக் கழகம்'' என்பது முற்றாகத் தமிழருக்கு மாத்திரம் ஒதுக்கி வைக்கப்பட வேண்டியதொன்றெனக் கொள்ளலாகாது. தமிழ் மொழியைப் பயில வேண்டுமென்ற ஆவலும் தகைமையுமுடைய எவருக்கும் இடமளிப்பதற்கு எவ்வித தடையுமிருத்தலாகாது தமிழ்மொழியை மாத்திரமன்றி மற்றைய மொழிகளான சிங்களம், ஹிந்தி, சீனமொழி, யப்பானிய மொழி என்பனவற்றுடன் மேலைப் பெருமொழிகளான ஆங்கிலம் பிரெஞ்சு, ஜேர்மன், ருஷிய மொழி என்பனவற்றையும் இப்பல்கலைக்கழக மாணவர்கள் கற்கும் வாய்ப்பைப் பெற ஆவன செய்யவேண்டும். பன்மொழி பயிற்றும் ஒரு பல்கலைக்கழகமாக இது அமைந்துவிட வேண்டும் என்பது இதன் கருத்தன்று. கலைப்பிரிவின் ஒரு முக்கிய அம்சமாக பன்மொழிக் கல்வி அமையவேண்டுமென்பதே கருதற்பாலது.

தமிழ்ப் பல்கலைக் கழகம் தமிழர் அதிகமாக வாழும் பகுதிகளான வடக்குக் கிழக்கு மாகாணங்களில் நிறுவப்பட வேண்டியது மிக மிக அவசியம். கலை, வைத்தியம் போன்ற பிரிவுகளை யாழ்ப்பாணத்திலும் விஞ்ஞானம், பொறியியல் ஆகிய பிரிவுகளைத் திருகோணமலையிலும் அமைக்க வேண்டும். அதே சமயம் விவசாயம் தொழில்நுட்பம் என்பனவற்றை மையமாகக் கொண்ட பல்கலைக் பல்கலைக்கழகப் பிரிவொன்றை மட்டக்களப்பில் நிறுவப்பட வேண்டும் இம்மூன்று இடங்களிலும் பல்கலைக் கழகப் பிரிவுகள் இருப்பினும் இவற்றை இயக்கும் காரியாலயமும் உத்தியோகத்தர்களும் ஓரிடத்திலே அமையப்பெற்றால் பல்கலைக்கழக நிர்வாகமும் சீராக இயங்க முடியும். அரசியலாரும் தமிழ்ப் பெருமக்களும் மனமார முயன்றால் இது நிச்சயம் கைகூடும்.

வரதலட்சுமி
பொன்னம்பலம்.

யாழ்ப்பாணம்,

## மானிப்பாய் நூல்நிலையம்

உங்கள் 21-3-66-ம் திகதித் தினப்பத்திரிகையில் செல்லமுத்து நூல்நிலையம் பற்றி புதினம் வந்துள்ளது. அதில் ''பல லட்சம் ரூபா செலவில்'' என்ற விபரம் தப்பானது. தவறான விளக்கத்தைக் கொடுக்கவும் கூடியது. உண்மையில் இக் கட்டிடம் ரூபா 25,000 செலவில் மாத்திரம் கட்டப்பட்டது. இப் பிழையைத் திருத்தும்படி உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இராசவாசல் முதலியார்
சி. தியாகராஜா,
தலைவர்.
(செல்லமுத்து நூல்நிலையக் கட்டடக்குழு.)

## ''மாணவர்கள் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும்''

### செனட்டர் நடராசா

யாழ்ப்பாணம், வெள்ளி

''இன்று மாணவர்களாயிருப்பவர்கள் நான்கு அல்லது ஐந்து வருடங்களுக்குப் பின் இலட்சியப் பாதையில் செல்லக்கூடும். சிறந்தஇலட்சியபாதையில் செல்லக் கூடும். சிறந்த இலட்சிய வாழ்க்கைக்கு பாடசாலைப் பருவத்திலேயே வித்திட வேண்டும். வாழ்க்கையைச் சீர்ப்படுத்தி நடத்துவதற்கு குருசிஷ்ய முறை வேண்டும். ஆசிரியர்களுக்கு மாணவர்கள் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். இவை இரண்டையும் மாணவர்கள் என்றும் மனதில் வைத்துக் கொள்ளவேண்டும்.''

யாழ். இந்துக் கல்லூரி விடுதி சிரேஷ்ட மாணவர் சங்கத்தினர் அளித்த தேநீர் விருந்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட செனட்டர் எஸ் நடராசா பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ். இந்துக்கல்லூரி அதிபர் திரு. நா. சபாரத்தினம். ஆசிரியர் திரு. மகாலிங்கசிவம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

## மாஸ்கோ சென்றனர்

கொழும்பு, விழா.

மாஸ்கோ பிரிவைச் சேர்ந்த டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்காவும், திரு பீட்டர் கெனமனும் சோவியத் யூனியனில் நடைபெறவிருக்கும் கம்யூனிஸ்ட்கட்சி மகாநாட்டில் பங்குபற்றுவதற்காக சென்றுள்ளார்கள்.

பீகிங் கொள்கைக்கு எதிர்மாறான திட்டத்தை எவ்வாறு முறைப்படுத்திக் கொள்ளலாம் என்பது பற்றி இந்த மகாநாடு ஆராயும்.

(5-ம் கலத்தொடர்ச்சி)

அந்தக் காசில் உருளைக்கிழங்கு வாங்கக் கூடிய வழிவகைகளை பரிசீலனை செய்ய வேண்டும். அல்லாவிடில், உள்நாட்டிலேயே நமக்குத் தேவையான உருளைக் கிழங்கை உற்பத்தி செய்யும் காலம்வரை அநாவசியமான சொகுசுப் பொருட்களின் இறக்குமதியை நிறுத்தி விட்டு அவசியமான இந்த உணவுப் பொருளைத் தருவிக்கலாம். அரிசி, மா, சீனி ஆகியவற்றிற்கு அடுத்தபடியாக உருளைக் கிழங்கு தான் நாம் உட்கொள்ளும் பிரதானமான உணவுப் பொருள் என்றும் கூறலாம், இறக்குமதி தடைசெய்யப்பட்டால் உள்ளூரில்விளையும் உருளைக் கிழங்கின் விலை அதிகரிக்குமென்பது நிச்சயம். இதனால் ஏழை மக்கள் கஷ்டப்பட நேரிடும்.

—வழிப்போக்கன்

## நாட்டிலும் நகரிலும்

ஜீவ இம்சை சட்டம் என்பதாக 1907-ம் ஆண்டில் இயற்றப்பட்ட ஒரு சட்டம் இலங்கையில் இருக்கிறது. இதன் பிரகாரம் எந்த மிருகத்தையாவது அடித்தோ, அதிக பாரம் சுமத்தியோ அல்லது வேறு எவ்வகையிலோ துன்புறுத்தி இம்சைப்படுத்துபவர்களுக்கு நூறு ரூபாய் அபராதம் அல்லது மூன்று மாதக் கடுங்காவல்இரண்டும்விதிக்கப்படும். மிருகங்களுக்கு வருத்தம் உண்டாகுமளவிற்கு அவற்றை நடத்துபவர்களும், கொடூரமான முறையில் அற்றைய கொல்பவர்களும் அதே தண்டனைக்கு உள்ளாவார்கள் என்று சட்டம் இருக்கிறது.

ஆனால் பொலிசார் இந்த சட்டத்தை அவ்வளவாக உபயோகிப்பதில்லை. கண்டதும் காணாததுமாக விட்டு விடுவார்கள். மிருக சம்ரக்ஷணை சங்கத்தினர். இப்பொழுது இதைப்பற்றி நினைவூட்டியதன் விளைவாக பொலிசார் எல்லோரும் இந்தச்சட்டத்தைஜரூராக செயற்படுத்த வேண்டுமென்று பொலிஸ் அதிபர் உத்தர விட்டிருக்கிறாராம். இது மிகவும் விரும்பத்தக்கதோர் செய்தி.

சுமக்க முடியாத பாரங்களை மாடுகள் மீதுசுமத்துவது அவைபளுதாங்கமுடியாமல் கீழே விழுந்து படுத்தால் வாலைப் பிடித்துமுறுக்குவது, அகோரமான அடிபோடுவது, வாலைப்பல்லால் கடிப்பது தடியின் நுனியில் ஆணி ஏற்றி வைத்துக்குத்துவது, நேரத்துக்கு உணவும் தண்ணீரும் கொடுக்காமல் வேலை செய்விக்கிறது, வாயில் நுரை தள்ள சவாரி செய்வது, கன்றுக்கு ஒரு சொட்டு விடாமல்பால்கறந்தெடுப்பதுஇப்படிஇன்னும் எத்தனையோ கொடுமைகள் நடக்கின்றன. இவை எல்லாவற்றையும் பொலிசார் தேடிப் பிடித்து குற்றம்செய்பவர்களைத் தண்டிக்கமுடியாவிட்டாலும் வழி தெருவில் காண்பவற்றையாவது உடனுக்குடனே கண்டு பிடித்து தண்டனை வழங்கலாம். நாள் முழுவதும் வண்டி இழுப்பதால் கழுத்தில்நுகம் தேய்த்து தேய்த்து பச்சைப் புண் உண்டாகியிருக்கும் மாடுகள் கூட, இளைக்க இளைக்கப் பாரமிழுக்கும் கோரக் காட்சியை எந்த நாளும் காண்கிறோம். வாய்பேசாத மிருகங்களை இப்படி இம்சிப்பவர்களை தயவு தாட்சணியம் காட்டாமல் தண்டிக்க வேண்டும்.

ஃ ஃ ஃ

அன்னிய செலாவணியை மிச்சப்படுத்துவதற்காக இவ்வருடம் ஜூலை மாதம் தொடக்கம் உருளைக்கிழங்கு சின்ன வெங்காயம் ஆகிய இரண்டு உணவுப் பொருட்களின் இறக்குமதியை அரசாங்கம் தடை செய்யப் போகிறதாம். தற்சமயம் இலங்கையில், முக்கியமாக யாழ்ப்பாணத்தில், உற்பத்தியாகும் சின்ன வெங்காயம் நாட்டின் தேவைக்கு மேலதிகமாக இருக்கிறது. ஆனால் உருளைக்கிழங்கு உற்பத்தியும் அப்படி இருக்குமோ என்பது சந்தேகம். நாட்டில் எல்லா இடங்களிலும் எப்பொழுதும் காய் கறி உணவுப் பொருட்கள் கிடைப்பதில்லை. உதாரணமாக வன்னிப்பகுதியில்குடியேற்றத்திட்டங்களில் வேலைசெய்பவர்கள் பெரும்பாலும் உருளைக் கிழங்கையும் பருப்பையுமே நம்பியிருக்கிறார்கள். உருளைக்கிழங்கு தடை இவர்களை பெரிதும் பாதிக்குமென்பதில் சந்தேகமில்லை. மேலதிகமாக உற்பத்தி செய்யப்படும் சின்ன வெங்காயத்தை வெளிநாடுகளுக்கு விற்று

(4-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மகாநாட்டுக்கு

# ரஷ்ய அழைப்பை சீனா நிராகரித்தது

## அமெரிக்காவுடன்சேர்ந்து சீனாவை வளைக்க முயல்வதாய் கண்டனம்

### மாஸ்கோ மகாநாட்டில் அல்பேனியாவும் கலந்துகொள்ளாது

மாஸ்கோ, மார்ச் 24

அடுத்த செவ்வாய்க் கிழமை ஆரம்பமாகும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 23-வது மகாநாட்டில் பங்குபற்றுமாறு விடுக்கப்பட்ட அழைப்பை சீனா நிராகரித்துவிட்டது.

ரஷ்யா, அமெரிக்காவுடன் சேர்ந்து உலக ஆதிக்கத்தை நிலைநாட்ட முயல்வதாயும், வியட்னாமை நசுக்க முயல்வதாயும், சீனாவைச் சுற்றி வளைக்க இடம் கொடுத்து வருவதாயும் சீனாவின் நிராகரிப்பில் கூறப்பட்டுள்ளது.

இதர நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகளை சீனாவுக்கெதிராக ரஷ்யா தூண்டிவிட்டு வருகிறதென்றும் சீனா குற்றஞ்சாட்டியுள்ளது.

சீன எதிர்ப்பு பிரசுரங்களை விநியோகித்திருப்பதாயும் அது மேலும் குற்றஞ்சாட்டியுள்ளது.

பீகிங்கின் நிராகரிப்பு உலகில் அமைதிப் போராட்டத்தை தவிர்ப்பதையே நோக்கமாகக் கொண்டிருக்கிறதென ஐ. நா.வில் ரஷ்ய தூதுகோஷ்டியைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் கூறினார்.

சீனாவின் நிராகரிப்பு தமக்கு ஆச்சரியமளிக்கவில்லை என்றும், ரஷ்யா அமெரிக்காவுடன் சமாதானத்தை நிலைநாட்ட முயலும் ஒவ்வொரு சமயமும் அதை எதிர்ப்பதே சீனாவின் கொள்கையாக இருந்து வந்திருக்கிறதென்றும் அமெரிக்க ராஜாங்க இலாகா கூறியுள்ளது.

மாஸ்கோவின் அழைப்பை அல்பேனியாவும் நிராகரித்திருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

### வடசீனாவில் பூமி அதிர்ச்சி

#### உயிர் நஷ்டம்

பீகிங், மார்ச் 24

வடசீனாவில் கடந்த செவ்வாய்க்கிழமை பல இடங்களில் நில அதிர்ச்சி ஏற்பட்டதாயும், சிங்டாங் பகுதியில் கட்டிடங்கள் இடிந்தன என்றும், ஹோப்பே, ஷாண்டுல் பகுதிகளில் நில அதிர்ச்சி ஏற்பட்டதென்றும், உயிர் நஷ்டம் ஏற்பட்டதாயும் அறிவிக்கப்பட்டது.

## ஸ்ரீமதி இந்திராகாந்தி அமெரிக்கா புறப்பாடு

### வழியில் டி'காலுடன் பேசுவார்

புதுடில்லி, மார்ச் 24

அமெரிக்காவில் 6 நாடுகள் தங்கும் பொருட்டு, அங்கு செல்லும் வழியில் ஸ்ரீமதி இந்திராகாந்தி இன்று [illegible] பாரிஸுக்குப்புறப்பட்டார்.

ஸ்ரீமதி காந்தி, பாரிஸில் இருதினங்கள் தங்கி ஜெனரல் டிகாலுடன் பேச்சு நடத்தவிருக்கிறார். வருகிற 28, 29-ம் திகதிகளில் அவர் அமெரிக்க ஜனாதிபதிஜோன்ஸனுடன் வாஷிங்டனில் பேச்சு நடத்துவார்.

ஸ்ரீமதி காந்தி, 'வாய்ஸ் ஆப் அமெரிக்கா' ஒலிபரப்பில் நேற்றுப் பேசியபோது உறுதி, ஒற்றுமை, சுதந்திரம், பொருளாதாரம், வெளி உறவுக்கொள்கை ஆகியவற்றில் பலமுடனிருந்தால், இந்தியாபோன்ற நாடுகளால் மட்டுமே சீனாவைக் கட்டுப்படுத்தமுடியும் என்றார்.

''சீனாவுக்குப் பிராந்திய கோரிக்கை மட்டும் நோக்கமல்ல. இந்தியாவின் ஜனநாயக லட்சியத்தையும் அது எதிர்க்கிறது'' என்றார் அவர்.

ஜனாதிபதி ஜோன்ஸனையும், இதர அமெரிக்கத் தலைவர்களையும் சந்திப்பதைத் தாம் ஆவலுடன் எதிர்பார்த்திருப்பதாயும், தம்முடன் நட்புக் கொண்டிருக்கும் அமெரிக்க மக்கள் இந்தியாவின் கொள்கைகளை நன்கு புரிந்து கொள்ளவேண்டுமென்றும் அவர் கூறினார்.

இந்தியா தனது திட்டத்தில் வெற்றிபெற்றால் அது உலகுக்கே நன்மையாக இருக்குமென்றும் தொடர்ந்து அவர் தெரிவித்தார்.

### 18 3/4 கோடி டாலர் உதவி

புதுடில்லி, மார்ச் 24

சர்வதேச நிதி ஸ்தாபனம் இந்தியாவுக்கு 18 கோடியே 75 லட்சம் டாலர் வழங்க அனுமதியளித்திருக்கிறது. பல்வேறு செலாவணிகளில் இது கிடைக்கும். சமீபத்தில் அது இந்தியாவுக்கு அளிக்கும் உதவியை 75 கோடி டாலராக உயர்த்தியது.

## "காஷ்மீர் மக்களுக்காக சீனா பாகிஸ்தானுக்கு உதவும்"

### பீகிங் வைபவத்தில் உதவிப் பிரதமர் சீ

பீகிங், மார்ச் 24

காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்ட பாகிஸ்தானுக்கு சீனா முழு ஒத்துழைப்பு அளிக்கும் என சீன உதவிப் பிரதமர் சீ மீண்டும் உறுதி கூறினார்.

இங்குள்ள பாகிஸ்தான் தூதராலயம் நடத்திய தேசிய தின வைபவத்தில் திரு. சீ பேசினார். பிரதமர் சூ என் லாயும் இந்தவைபவத்தில் கலந்து கொண்டார்.

சீனாவுக்கும், பாகிஸ்தானுக்குமிடையே உறுதியான நட்புறவு இருப்பதாயும், அடுத்து ஜனாதிபதி லியூஷாசி ராவல்பிண்டிக்கு செல்வதைத் தொடர்ந்து இந்தநட்புறவு மேலும் அதிகரிக்கும் என்றும் சீ தெரிவித்தார்.

சமீப காலங்களில் பாகிஸ்தான் சுதந்திரமான கொள்கைகளைக் கடைப்பிடித்து வருகிறதுஎன அவர் பாராட்டுத் தெரிவித்தார்.

''இந்தியா ஆக்கிரமிப்பு நாடு'' என திரு. சீ குறிப்பிட்டதைத் தொடர்ந்து வைபவத்துக்கு வந்திருந்த இந்தியத்தூதர்திரு. மேத்தா கூட்டத்திலிருந்து வெளியேறினார்.

#### அயூப் பேச்சு

காஷ்மீர் பிரச்னை தீர்க்கப்பட்டாலொழிய இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுக்குமிடையே நிரந்தரசமாதானம் இருக்கமாட்டாது என ஜனாதிபதி அயூப்கான் நேற்று ராவல்பிண்டியில்நடைபெற்ற தேசியதின அணிவகுப்பில்பேசியபோது குறிப்பிட்டார்.

பொருளாதார பற்றாக்குறை இருந்தபோதிலும் அதுவரை பாகிஸ்தான் தனது ராணுவ வலிமையை தளர்த்தாது என்றும் அவர் கூறினார்.

இந்தோனேஷியா

## சுகர்ட்டோவை கொல்ல சுபந்திரியோ முயன்றார்!

### இரண்டாவது ஆயுதக்குவியல் கண்டு பிடிக்கப்பட்டது

ஜாகர்த்தா, மார்ச் 24

ராணுவம் தன்னைக் கவிழ்த்து விட்டதாகக் கூறப்படுவதை இந்தோனேஷிய ஜனாதிபதி டாக்டர் சுகர்னோ மறுத்து தாமே இன்னும் நாட்டுக்கும், அரசாங்கத்துக்கும் தலைமை வகிப்பதாக அறிவித்தார்.

அதேசமயம் இந்தோனேஷிய ராணுவத் தலைவர் ஜெனரல் சுகர்ட்டோவை கொலை செய்ய முயன்றதற்காக முன்னாள் வெளி மந்திரி டாக்டர் சுபந்திரியோ, கைது செய்யப்பட்டிருப்பதாய் ராணுவப் பத்திரிகை கூறியது.

கொலை முயற்சிக்கு 1 கோடி ரூபாய் வரை அவர் ஏற்பாடு செய்ததாயும், இதில் சம்பந்தப்பட்ட டாக்டர் சுபந்திரியோவின் பல ஆதரவாளர்களும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்றும் அது கூறியது.

சுபந்திரியோவின் தலைமையில் இயங்கிய மத்திய உணவு ஸ்தாபனத்தில் இரண்டாவது பெரும் ஆயுதக்குவியல் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. கம்யூனிஸ்ட் எதிர்ப்பு மாணவர்களையும், ராணுவத்தையும் எதிர்த்துப் போராட இந்த ஆயுதங்களை வழங்க சுபந்திரியோ திட்டமிட்டிருந்ததாய்க் கூறப்பட்டது.

இதற்கிடையில் இந்தோனேஷியாவில் நிலைமை மாமூலுக்குத் திரும்பிக் கொண்டிருப்பதாயும், ஊரடங்குச் சட்டம் மூன்றரை மணி நேரம் குறைக்கப்பட்டிருப்பதாயும் அறிவிக்கப்பட்டது.

சீனத்தூதர் உட்பட 11 ராஜதந்திரிகள் ஜாகர்த்காவிலிருந்து தாயகம் திரும்பியிருக்கிறார்கள்.

இந்தோனேஷிய விமானத் தளபதி ஏர்வைஸ் மார்ஷல் ஹலாம்பான் ராஜினாமாச் செய்து விட்டார்.

### ஜோன்ஸன்

வாஷிங்டன், மார்ச் 24

பிரான்ஸின் முடிவை யிட்டு நேட்டோ சகாக்களுடன் அமெரிக்கா ஆலோசனை செய்து வருவதாக ஜனாதிபதி ஜோன்ஸன் கூறியிருக்கிறார்.

பிரான்ஸ் ஸ்தாபனத்திலிருந்து வாபஸ் பெற்றால் மீண்டும் அது உள்ளே வர எப்போதும் கதவு திறக்கப்பட்டிருக்கும் என்றும் ஜோன்ஸன் கூறினார். நேட்டோவின்கூட்டு முயற்சி அத்தியாவசியமானது எனவும் அவர் குறிப்பிட்டார்.

சீனாவுடன் அதிக தொடர்பு வைத்திருக்க அமெரிக்கா விரும்புவதாயும் ஜனாதிபதி மேலும் கூறினார்.

### 6-ந் திகதி மே. வங்க ஹர்த்தால்

கல்கத்தா, மார்ச் 24

அடுத்த மாதம் 6-ந் திகதி ஹர்த்தால் நடத்துமாறு மேற்கு வங்க இடதுசாரி முன்னணி கேட்டிருக்கிறது. முதல் மந்திரி திரு. சென்னின் பதில்களுக்குத் திருப்தியளிக்காததால் தொடர்ந்து கிளர்ச்சியை நடத்தும்படி அது தீர்மானித்துள்ளது. நேற்று ரயில் பெட்டி ஒன்றுக்குத் தீமூட்டிய சம்பவம் மேற்கு வங்காளத்தில் இடம் பெற்றது.

## தென் வியட்னாமில் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

### ரேடியோ நிலையத்தை மாணவர்கள்பிடித்தனர்

வாஷிங்டன், மார்ச் 24

வியட்னாம் யுத்தத்தில் அமெரிக்கா வெற்றி பெறும் என உதவி பாதுகாப்பு மந்திரி அறிவித்திருக்கிறார்.

இப்போது அங்கு 2,20000 அமெரிக்க துருப்புக்கள் இருப்பதாயும் அவர் கூறினார்.

இதற்கிடையில் கடந்த இரு தினங்களில் அமெரிக்க விமானங்கள் வடவியட்னாம் மீது 55 முறை தாக்குதல்களை நடத்தியதாக அறிவிக்கப்பட்டது.

வியட்னாம் யுத்தத்துக்கு 1300 கோடி டாலர் அனுமதிக்குமாறு ஜனாதிபதிஜோன்ஸன் விடுத்த கோரிக்கையை செனட் அனுமதித்திருக்கிறது.

தென்வியட்னாமில் நேற்று மாணவர்கள் பெரும் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தினார்கள். டானாங்கிலுள்ள அமெரிக்க தளத்தில் வேலைசெய்யும் தென்வியட்னாம் தொழிலாளர்கள், நேற்று வேலைக்குப் போகவில்லை.

ஆர்ப்பாட்டத்தை முன்னிட்டு அமெரிக்க தகவலகம் ஒன்று மூடப்பட்டது.

மாணவர்கள் ரேடியோ நிலையம் [illegible] பற்றி அரசாங்கத்துக்கு விரோதமாகப் பிரசாரம் செய்தார்கள்.

### பம்பாயில் நேபாள மன்னர்

பம்பாய், மார்ச் 24

நேபாள மன்னர் மஹேந்திராவும், ராணி ரத்னாவும் 6 நாள் தனிப்பட்ட விஜயத்தை முன்னிட்டு பம்பாய் வந்திருக்கிறார்கள்.

### கொலை செய்யப்பட்ட 3-வயதுக்குழந்தை

அநுராதபுரம், வியா.

மூன்றுவயதுப் பெண் குழந்தை ஒன்று கொலை செய்யப்பட்டுக்கிடந்த பரிதாபகரமான சம்பவம அநுராதபுரத்திலுள்ள மகா இலுப்பலாமா என்ற இடத்தில் நடைபெற்றுள்ளது.

தமது மூன்றுவயதுக்குழந்தையைக் காணவில்லையென்று பொலிசாருக்குப் பெற்றோர் செய்த புகாரைத் தொடர்ந்து பொலிஸாரும் கிராமத் தலைவர்களும் குழந்தையை தேடிச்சென்றபோது அவர்களின் வீட்டிற்குசிறிது தூரத்திலுள்ள காட்டுக்குப்போகும் பாதையில் மேற்படி குழந்தை கொலைசெய்யப்பட்டநிலையில் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகா இலுப்பலாமாவைச் சேர்ந்த 42 வயதுடைய ஒருவரை பொலிஸார் சந்தேகத்தின் மீது கைதுசெய்துள்ளனர்.

### கூட்டாக எதிர்ப்போம்

ஆக்ரா, மார்ச் 24

கினி அதிபர் செகுடோரேயின் துருப்புக்கள் அனுப்பும் முயற்சியை கூட்டாக எதிர்த்து நிற்பதென கானாவும், ஐவரிகோஸ்டும் தீர்மானித்திருக்கின்றன.

### 44 இரட்டைத்தட்டு பஸ்கள்

#### இலங்கை வரும்

பம்பலப்பிட்டி, வியா.

இ. போ. ச. வுக்கு லண்டனிலிருந்து மேலும் 44 இரட்டைத்தட்டு பஸ்கள் அடுத்தமாதத்தில் வரவிருப்பதாகஅறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ராலி வழக்கு

# 'எக்ஸ்ரே' படப்பிடிப்பாளருக்கு 'வாரண்ட்' உத்தரவு!

மாவிட்டபுரம், வியா.
மல்லாகம் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் ஏற்கெனவே விசாரணைக்கு எடுக்கப்பட்டு ஒரே தராதரமுள்ள இரு சத்திரசிகிச்சை நிபுணர்கள் இருவருக்கு ஒருவர் முரணான சாட்சியமளித்த அராலி வழக்கு மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. ஜி. எவ். எச். ந்துறுபாஞ முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது விசாரணையின் போது மாஜிஸ்திரேட் கொழும்பைச் சேர்ந்த ஒரு எக்ஸ்ரே படப்பிடிப்பாளருக்கு வாரண்ட் உத்தரவு பிறப்பித்தார்.

இவ்வழக்கில் அராலியைச் சேர்ந்தவர்களான தருமலிங்கம் தியாகராசா, தருமலிங்கம் மகேந்திரன், தருமலிங்கம் நடராசா, பொன்னையா தருமலிங்கம் ஆகிய நால்வரும் அதே ஊரைச் சேர்ந்த கந்தையா கனகசபையைக் கத்தியால் வெட்டிப் படுகாயம் ஏற்படுத்தியதாகவும், அதேநேரத்தில் கந்தையா சுப்பையா என்பவருக்குச் சிறுகாயம் விளைவித்ததாகவும் சங்கானைப் பொலிஸாரால் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஜே. ஆர். செல்வரத்தினம் ஆஜரானர். காயமடைந்தவரின் தரப்பில் சங்கானைப் பொலிசாரின் உதவியுடனும் வழக்கறிஞர் திரு. சி. வி. பாலசிங்கத்தின் அனுசரணையுடனும் திரு. ஆர். கண்ணுத்துரை வழக்கை நடத்தினர்.

இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். சுப்பிரமணியம் யாழ்ப்பாணம் சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ். ஜே. சீவரத்தினம் ஆகியோர் சாட்சியமளிக்கையில் கந்தையா கனகசபையின் தலையிலுள்ள காயம் படுகாயமல்ல எனச் சாட்சியமளித்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் திரு. செல்வரத்தினம் நீதிபதியிடம் சாட்சியமளித்த இரு டாக்டர்களும் கந்தையா கனகசபையின் தலையிலுள்ள காயம் படுகாயமல்ல என்று சாட்சியமளித்துள்ளார்கள் என்றும் ஆனால் பொலிஸார் படுகாயமெனக் கூறி 317ம் பிரிவில் குற்றஞ்சாட்டியுள்ளார்களென்றும் இப்போது உள்ள டாக்டர்களின் சாட்சியத்தின்படி இக்குற்றச்சாட்டை நிரூபிக்கமுடியாதென்றும் ஆகையால் குற்றச்சாட்டை 315ம் பிரிவுக்கு மாற்றும்படியும் வாதித்தார்.

இதனை ஆட்சேபித்த வழக்கறிஞர் திரு. கண்ணுத்துரை நீதிபதியிடம் முதலில் காயமடைந்தவரின் காயத்தைப் பரிசோதித்த அறிக்கையின்படி தான் பொலிஸார் குற்றப்பத்திரிகையைத் தாக்கல்செய்துள்ளார்களெனவும் காயமடைந்தவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் கொழும்பில் உள்ள மற்றேர் சத்திரசிகிச்சை நிபுணரான டாக்டர் வைமனைக்கொண்டு தலையிலுள்ள காயத்தைப் பரிசோதித்ததாகவும் அவர் தலையிலுள்ள காயம் படுகாயமென அறிக்கை அனுப்பியுள்ளதாகவும் கூறி அறிக்கையைச் சமர்ப்பித்தார். இதனைத் தொடர்ந்து மாஜிஸ்திரேட் ஒரே தராதரமுள்ள இரு சத்திர சிகிச்சை நிபுணர்களையும் ஒரே தினத்தில் சாட்சியமளிக்கக்கூடிய விதத்தில் வழக்கை ஒத்திவைத்திருந்தார். பின்னர் சாட்சியமளித்த டாக்டர் வைமன் காயமடைந்தவரின் தலையிலுள்ள காயம் படுகாயமெனவும் அதற்குச் சான்றாகத் தான் எடுத்த 3 எக்ஸ்றே படங்களையும் சமர்ப்பித்து டாக்டர் சீவரத்தினம் பிடித்த இரண்டு படங்களில் கூடத் தலையிலுள்ள வெடிப்பு தெளிவாக உள்ளதென்றும் கூறினர்.

இதனைத் தொடர்ந்து சாட்சியமளித்த டாக்டர் சீவரத்தினம் தான் பிடித்ததும் டாக்டர் வைமன் சமர்ப்பித்ததுமான ஐந்து எக்ஸ்றே படங்களிலும் உள்ளபடி காயமடைந்தவரின் தலையிலுள்ள காயம் படுகாயமல்லவென்று கூறினர். இதனைத் தொடர்ந்து சாட்சியமளித்த யாழ்ப்பாணம் எக்ஸ்றே வாசிக்கும் நிபுணரான டாக்டர் திருமதி எஸ். துரைராசசிங்கம் டாக்டர் சீவரத்தினத்தின் இரண்டு எக்ஸ்றேயிலும், டாக்டர் வைமனின் ஒரு எக்ஸ்றேயிலும் காயமடைந்தவரின் தலையில் வெடிப்பு இல்லையென்றும், ஆனல் வைமனின் மற்ற இரண்டு எக்ஸ்றேயிலும் தலையில் வெடிப்பு இருக்கிறதென்றும் கூறினர்.

இவர்களின் முரண்பட்ட சாட்சியங்களை தொடர்ந்து எதிரிதரப்பு வழக்கறிஞரின் கோரிக்கையை ஏற்றுக் கொழும்பிலுள்ள எக்ஸ்றே வாசிக்கும் நிபுணரான டாக்டர் குவின்ரஸ் பீரிஸுக்கும் கொழும்பிலுள்ள டாக்டர் சுலைமானின் நர்ஸிங்ஹோமைச் சேர்ந்த எக்ஸ்றே படப்பிடிப்பாளரான முகமதுவுக்கும் கோர்ட்டில் ஆஜராகுமாறு நீதிபதி உத்தரவிட்டிருந்தார். நேற்றைய விசாரணையின்போது முன்னவர் வைத்திய அத்தாட்சிப்பத்திரம் அனுப்பியிருந்தார். பின்னவர் எவ்வித தகவலும் அனுப்பவில்லை. இதனைத் தொடர்ந்து நீதிபதி டாக்டர் சுலைமானின் நர்ஸிங்ஹோமைச் சேர்ந்த எக்ஸ்றே படப்பிடிப்பாளரான முகமதுவுக்கு வாரண்ட் உத்தரவு பிறப்பித்து வழக்கை அடுத்த மாதம் 23ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## அஸ்திபாரக்கல் நாட்டுவிழா

கோண்டாவில், வியா.
கோண்டாவில் மேற்கு ஸ்ரீ சந்திரசேகரவிநாயகர் ஆலய அஸ்திபாரக்கல் நாட்டுவிழா வருகிற ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். காணி, நீர்ப்பாசனம், மின்சார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. ம. ஸ்ரீகாந்தா அஸதிபாரக்கல்லை நாட்டுவார். சைவப் பெரியார்கள் பலர் சொற்பொழிவாற்றுவார்கள்.

## வெளியேற உத்தரவு

ஸாலிஸ்பரி, மார்ச் 24
ரொடீஷியா, இரு பிரிட்டிஷ் ராஜதந்திரிகளை வெளியேறுமாறு உத்தரவிட்டிருக்கிறது.

## குருத்துவ அழைத்தல் வாரம்

யாழ்ப்பாணம், வெள்ளி
கத்தோலிக்க எஸ். எஸ். ஸி. மாணவர்க்கு குருத்துவ அழைத்தல் வாரம் ஏப்ரல் மாதம் 28-ம் திகதி முதல் ஒருவார காலத்துக்கு கண்டி அமல மரி தியாகிகள் குரு மடத்தில் நடைபெறும்.

## புற்றுநோய் தடுப்பு பிரசாரம்

சுழிபுரம், வியா.
யாழ்ப்பாண மாவட்டத்தில் புற்றுநோயாளர் தொகை அதிகரித்த வண்ணம் இருக்கின்றது. மஹாறகமவிலுள்ள வைத்தியசாலையில் யாழ்ப்பாணநோயாளர் அநேகம்பேர் காணப்படுகின்றனர். இதனால் யாழ். மாவட்ட புற்றுநோயாளர் சங்கத்தினர் புற்றுநோய் தடுப்புப் பிரசாரத்தில் அதிகம் ஈடுபட்டுள்ளனர்.





லக்ஷபான பாட்டரிகள்

இறக்குமதியாகும் எந்த பாட்டரியையும் விட குறைந்த செலவில் கூடிய சேவை தருகின்றன.

ஏனெனில்:

- ★ அவை, பூரண சக்தியுடனே தொழிற்சாலையிலிருந்து புதுமை குலையாமல் உங்களை வந்தடைகின்றன. இறக்குமதிபாட்டரிகள் போல சேமிப்பில் இருப்பதால் அவை சக்தி இழப்பதில்லை
- ★ லக்ஷபானபாட்டரிகள், சர்வதேச மின் நுணுக்க கமிஷன்விதிக்கும் தரங்களுக்கு நிகரான அதி உன்னத சிறப்பு வாய்ந்தவை என்று பரீட்சித்து நிருபிக்கப்பட்டவை.
- ★ லக்ஷபான பாட்டரிகள இறக்குமதியாகும் எந்த ரகங்களையும் விட மிக மலிவானவை.

எவ்.பண்ட் லேட் கார்ப்பரேஷன் லிமிட்டெட்


# தந்தையைப்போல் தனயன்



தன் தந்தையைப் போலவே மகனும் ஒஸ்டர்மில்க் அருந்தி, ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும் வளர்வான்.

ஒஸ்டர்மில்க் சுத்தமான, தூய்மை மாருத பூரண பால் உணவு, பச்சிளங் குழந்தையின் மென்மையான ஜீரணத்திற்கு பாதுகாப்பானது. அயச்சத்தும் விட்டமின் Dயும் சேர்க்கப்பட்டிருக்கும் ஒஸ்டர்மில்க் குழந்தைகளை திடகாத்திரமாகவும், ஆரோக்கியமாகவும் வளரச்செய்கிறது.




துவக்கத்திலிருந்தே ஒஸ்டர்மில்க் அருந்தும் குழந்தைகள் பெலனான சுக வளர்ச்சி பெறுகிறர்கள்.

# ஒஸ்டர்மில்க்.

க்ஸோ-அலன்பரீஸ் சிலோன் லிமிட்டட்., தபாற் பெட்டி 23, கொழும்பு.


ஞாபகமிருக்கட்டும்
இன்னும் 5 நாட்களுக்கு மட்டும்

போன்: 7099

ரேலரூம்ஸ்

கணக்கெடுக்கும் மலிவு விற்பனை

- நைலோன் கவுன்
- ரவற்ரு கவுன்
- கொட்டன் கவுன்
- குழந்தைகளின் சூட்ஸ்
- மற்றும் துணிவகைகள்

மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.

46, பெரியதெரு, :-: யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## புலோலி
## ப. நோ. கூ. ச. சமாசம்

சில்லறை விற்பனை நிலையத்திற்கு மேல்வரும் பதவிகளுக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து (ஆண்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பொறுப்பாளர் (நுகர்ச்சிப் பகுதி)

கல்வித் தராதரம்:—சிரேஷ்ட தராதரப்பத்திரம் அல்லது ஜி. சி. ஈ. (எண் கணித முட்பட ஆறு பாடங்கள்) அல்லது 5 வருடம் சில்லறை வியாபாரத்தில் அனுபவம்.

வயது:—30-4-66ல் 25 வயதுக்குக் குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல்வேண்டும்.

சம்பளம்:—மாதமொன்றுக்கு எல்லாப்படிகளுமுட்பட ரூபா 125/-

பிணை:—காசுப்பிணை ரூபா 1000/-

ஆதனப்பிணைரூபா 3000/-

2. உதவிப் பொறுப்பாளர்

கல்வித் தராதரம்:—கனிஷ்டதராதரப்பத்திரம் அல்லது சில்லறை வியாபாரத்தில் 5 வருட அனுபவம்.

வயது:—30-4-66-ல் 25 வயதுக்குக் குறையாமலும் 40வயதுக்குமேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

சம்பளம்:—மாதமொன்றுக்கு எல்லாப்படிகளுமுட்பட ரூபா 110/-

பிணை:—காசுப்பணை ரூபா 500/-

ஆதனப்பிணைரூபா 1000/-

3. காசாளர்

கல்வித்தராதரம்:— சிரேஷ்ட தராதரப்பத்திரம் அல்லது ஜி. சி. ஈ. (எண்கணித முட்பட ஆறு பாடங்கள்) அல்லது காசாளராக வேறு ஸ்தாபனத்தில் கடமையாற்றிய 5 வருட அனுபவம்.

வயது:—30-3-66-ல் 25 வயதுக்குக் குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

சம்பளம்: மாதமொன்றுக்கு எல்லாப்படிகளுமுட்பட ரூபா 150/-

பிணை: காசுப்பிணை ரூபா 1500/-

ஆதனப்பிணைரூபா 3000/-

4. இலிகிதர்

கல்வித் தராதரப் பத்திரம்:—கனிஷ்டதராதரப்பத்திரம் (ஆங்கிலம் கணிதமுட்பட) ஆங்கிலத்திலும் தமிழிலும் தட்டெழுத்து அனுபவம் விரும்பத்தக்கது.

வயது:-30-4-66-ல் 23வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

சம்பளம்:— மாதமொன்றுக்கு எல்லாப் படிகளுமுட்பட ரூபா 125/-

பிணை:—காசுப்பிணை ரூபா 500/-

ஆதனப்பிணைரூபா 2000/-

5. விற்பனையாளர் (இரண்டு இடம்)

சம்பளம்: — மாதமொன்றுக்கு எல்லாப்படிகளுமுட்பட ரூபா 100/-

பிணை:—காசுப்பிணை ரூபா 250/-

6. உதவி விற்பனையாளர் (இரண்டு இடம்)

சம்பளம்:—மாதமொன்றுக்கு எல்லாப்படிகளுமுட்பட ரூபா 75/-

பிணை:—காசுப்பிணை ரூபா 100/-

7. காவற்காரர்

சம்பளம்:-எல்லாப்படிகளுமுட்பட மாதமொன்றுக்கு ரூபா 60/-

பிணை:—காசுப்பிணை ரூபா 100/-

விண்ணப்பங்கள் பதிவுத் தபால்மூலம் சொந்தக் கையெழுத்தில் 5-4-66-க்கு முன் அண்மையில் பெற்ற

### நெசவாளர்களுக்கு ஓர் அறிவித்தல்

நீங்கள்
உற்பத்தி செய்யும்
சகல
கைத்தறி ஜவுளிகளையும்
நியாயமான
விலைகளில் எம்மிடம்
விற்பனை செய்யலாம்.
எஸ். ஆர். செல்லத்துரை
216, கே.கே.எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.
போன்: 296

### NOTICE OF HYPOTHECARY ACTION

In The District Court of Jaffna,

Rasartnam daughter of Ramalingam Arunasalam of Vannarponnai North-West.

Plaintiff

No. MB/6666 Vs.

1. Mohideen Kandu Sultan Cader alias N.K. Sultan of Chemmah Street, Jaffna presently Tailor of No. 11/5 Aliar Gardens, Kotahena.
2. Kulanthaivelu Kathiravelu of Pungudutivu presently of Navalar Road, Jaffna.

Defendants

To,

1. Chellappah Nadarajah, Vaddukkoddai West. Vaddukkoddai
2. Sivakolunthu wife of Perampalam Vamadevan, Erlalai West, Chunnakam

Notice is hereby issued to you in Terms of Section 9(1)/9 (2) of the Mortgage Act 1949 of the above action instituted upon a mortgage of the land described in the schedule here to.

This 23 day of Feb. 1966.

sgd. K. Kulendra
Secretary.

THE SCHEDULE ABOVE REFERRED TO

All that piece of land called Aninchilady in extent 3/4th lms. V. C. with buildings and plantations and other appurtenances belonging thereto and situated at Vannarponnai South-East in the Parish of Vannarponnai in the Division and District of Jaffna Northern Province and bounded on the East and South by the property of Arunasalam Chettiar, North by lane, West by the remaining portion of this land belonging to Sultan Yuscof. 2071

## நியமனம்

யாழ்ப்பாணம், வெள்ளி

டாக்டர் ஐ. எஸ். சின்னத்தம்பி மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியாக நியமனம் பெற்றுள்ளார். மானிப்பாயில் சுகாதாரப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய திரு. இ. ஆர். போல் மேற்பார்வைச் சுகாதாரப் பரிசோதகராகக் கடமையாற்றுவார் பொதுச் சௌக்கியப் பிரிவுகளாகிய காரைநகர், சுழிபுரம், பண்டத்தரிப்பு, சங்கானை, மானிப்பாய், ஆனைக்கோட்டை, வட்டுக்கோட்டை, அராலி ஆகியபகுதிகள் மேற்படி சுகாதார வைத்திய அதிகாரியின் மேற்பார்வையில் இயங்கிவருகின்றன.

இருநற்சாட்சிப் பிரதிகளுடன் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பப்படவேண்டும்.

தலைவர்
புலோலி ப. நோ. கூ. ச.
சமாசம்
பருத்தித்துறை

2067

## தர்மபாலா வெற்றி

யாழ்ப்பாணம், வியா

பருத்தித்துறை ஹாட்லி கல்லூரிக்கும், பனிப்பிட்டியா தர்மபாலா வித்தியாலயத்துக்குமிடையில் ஹாட்லி கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் தர்மபால வித்தியாலயம் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தர்மபால வித்தியாலயம் தனது சகல விக்கெட்டுகளையும் இழந்து 80 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

ஹாட்லி கல்லூரி தனது முதல் ஆட்டத்தில் சகல விக்கெட் நஷ்டத்துக்கும் 114 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பாலசுப்பிரமணியம் 37 ஓட்டங்களையும் ரத்தினராஜா 28 ஓட்டங்களையும் பெற்றனர். சேனநாயக்கா, ரணசிங்கா ஆகியோர் முறையே 37 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும், 51 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

தர்மபால வித்தியாலயம் தனது இரண்டாவது ஆட்டத்தில் மிகவும் திறமையாகவும் வேகமாகவும் துடுப்பெடுத்தாடி 353 ஓட்டங்களைப் பெற்று எல்லா விக்கெட்டுகளையும் இழந்தது. இதில் ஒலிவர் ரணசிங்கா (காப்டன்), விதானகே 64, 55 ஓட்டங்களைப் பெற்றனர்.

ஹாட்லி கல்லூரி இரண்டாவது ஆட்டத்தில் எல்லா விக்கெட்டுகளையும் பறிகொடுத்து மொத்தம் 54 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

ஆட்டம் முடிவில் தர்மபால வித்தியாலயம்ஹாட்லி கல்லூரியை165 அதிகப்படியான ஓட்டங்களால் தோற்கடித்தது.

## "மக்கள் சேவையாளன்"

மல்லாகம், வியாழன்

"வண ஆபிரகாம் சுவாமி குளமங்கால் என்ற இந்தச் சிறிய ஊருக்கு குறிப்பாக கத்தோலிக்க மக்களுக்கு பதினெட்டு வருடங்களுக்கு மேலாகச் சமய சுகாதார கல்வித் துறைகளில் ஆற்றிய பணி பாராட்டவேண்டிய தொன்று. அவர் இறைபணியோடு நின்றுவிடாமல் ஒவ்வொரு குடும்ப நலனிலும் அக்கறை கொண்டு உழைத்து வந்தது குறிப்பிடத்தக்கது."

இவ்வாறு வண. ரி. சௌந்தரநாயகம் ஆபிரகாம் சுவாமியின் உருவப்படத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

விழா குழமங்கால் றோ. க. பாடசாலையில் தலைமை ஆசிரியர் திரு. சி. ஞா. பரம்சோதி தலைமையில் நடைபெற்றது.

தலைவர் திரு. பரஞ்சோதி பேசுகையில், திண்ணைப் பள்ளிக்கூடமாக இரு ஆசிரியர்களுடன் இருந்த இப் பாடசாலையை ஒரு சிரேஷ்ட பாடசாலையாக்கிய பெருமை வண. ஆபிரகாம் சுவாமியையே சாரும் என்றார்.

## கைகலப்பு
### நாய்தான் காரணமாம்!

வல்வெட்டித்துறை, வியா.

தொண்டமானாற்றிலுள்ள இரு குடும்பங்களுக்கிடையே நாயினால் ஏற்பட்ட வாய்ச் சண்டையைத் தொடர்ந்து கைகலப்பும், ஆயுதமும் பாவிக்கப்பட்டதாக வல்வெட்டித்துறைப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தை யொட்டி ஒரு பெண்மணி காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஒரு வீட்டாருடைய நாய் ஒன்று அடுத்த வீட்டாருக்கு தீங்கிழைத்ததாகக் கூறப்படுகின்றது. [illegible] டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## காரைநகருக்கு புதிய தபாற் கந்தோர்?

யாழ்ப்பாணம், வெள்ளி

காரைநகரில் நவீன முறையில் ஒரு தபாற் கந்தோர் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தபாற் கந்தோரை நிறுவுவதற்கான இடத்தை தேர்ந்தெடுக்குமாறு பிரதமதபால் அதிகாரி திரு. ஏ. எஸ். பெரேரா அரசாங்க அதிபருக்கு அறிவித்துள்ளார் எனத்தெரியவருகிறது. தேர்ந்தெடுக்கப்பட்டதும் கட்டடம் அமைக்கப்படும். இதுவிஷயமாகக் கொழும்பு-காரை அபிவிருத்திச் சபை, போஸ்ட்மாஸ்டர் ஜெனரலை சந்தித்துப் பேசியதாகவும் கூடிய விரைவில் கட்டடம் அமைக்க நடவடிக்கை எடுப்பதாக அவர் உறுதி கூறியுள்ளார் எனவும் தெரியவருகிறது.

## பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளை

கொழும்பு, வியா.

வேலணை மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் கிளையொன்றைக் கொழும்பில் நிறுவுவது பற்றி ஆலோசிப்பதற்கும், கிளையை நிறுவுவதற்கு ஆகவேண்டிய நடவடிக்கைகள் எடுப்பதற்கும் ஓர் அமைப்புக் குழுவைத்தெரிவு செய்வதற்குமாக கொழும்பு கப்பித்தாவத்தை தொண்டர் வித்தியாலய மண்டபத்தில், மேற்படி வித்தியாலய பழைய மாணவர்களின் கூட்டமொன்று நடைபெற்றது. திருவாளர்கள் இ. வி. தளையசிங்கம், பொ. துரையப்பா, வே. பாலசுப்பிரமணியம் ஆகியோர்மேற்படி சங்கத்தின் கொழும்புக் கிளையொன்றை அமைப்பதன் அவசியத்தையும், அவ்வாறு கிளையொன்றை அமைப்பதினால் வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கு எந்தெந்த முறையில் ஆக்கமும், ஊக்கமும் அளிக்கலாம் என்பது பற்றியும் எடுத்துரைத்தார்கள். பின்வரும் அமைப்புக்குழு தெரிவுசெய்யப்பட்டு, கூடிய விரைவில் ஆவன செய்து சிறந்த முறையில் ஒரு பொதுக் கூட்டத்தைக் கூடி, ஒரு கிளைச் சங்கத்தை உருவாக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

தலைவர்: இ. வி. தளையசிங்கம், உப-தலைவர்: பொ. துரையப்பா, செயலாளர்: வே பாலசுப்பிரமணியம். செயற்குழு உறுப்பினர்: சோ. சு. மகாலிங்கம், சோ. பொன்னம்பலம்பிள்ளை, இ. ஏகநாதன், சு. பேரம்பலம்.

இறுதியில் தேனீர் விருந்துடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

## வரிவிளம்பரம்

### தேவை

யாழ்ப்பாணம் பெரிய கடை வீதியில் ஆரம்பமாகவிருக்கும் வர்த்தக ஸ்தாபனம் ஒன்றுக்கு மனேஜர் தேவை. தராதரம்: ஆங்கில அறிவுடையவரும் (வயது 25 முதல் 40) நம்பிக்கையும், நாணயமும் உடையவராகவும். ரொக்கம் ரூ. 5000/- பிணை கட்டக்கூடியவராயும் இருக்க வேண்டும். சம்பளம்: 250/- முதல் 300/- டிப்பாசிட் தொகைக்கு 6 வீத வட்டி பெற்றுக் கொள்ளலாம்.) விளம்பர இல. 2190, ஈழநாடு மே/பா என எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 2190

### விற்பனைக்கு

புதிய குடியியல் எட்டாம் வகுப்பு, நூலாசிரியர்கள்: வ. மகாதேவன் B. A, Dip. in Ed. (Ceylon), வி. சிவசுப்பிரமணியம் B.A. Economics(Ceylon) பிரசுரம்: ஸ்ரீ காந்தா அச்சகம்-புத்தகசாலை, 213, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். விலை ரூபா: 2 50. 2198

கீழ்க்காணும் புடவைக் கடைத் தளபாடங்கள்: 6 கண்ணாடி அலுமாரிகள், 3 ஷோகேஸ்கள். உரிமையாளர்: பி. பிரான்சிஸ்பிள்ளை, ஊர்காவற்றுறை. 2214

சிறந்த முறையில் கட்டப்பெற்ற மாடி வீடு (பத்திராஸ்) சகல வசதிகளுடன் உள்ளது. 93,95, மெயின் வீதி, யாழ்ப்பாணம். விபரங்கட்கு: சாளி எவாட்ஸ், 3-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 2218

### வாடகைக்கு

சுன்னாகம் சந்தையின் தென்மேற்கு மூலையில் மூன்று விசாலமான கடைகள் வாடகைக்குண்டு. எவ்வித வியாபாரத்துக்கும் பொருத்தமானவை. ஒன்று உடனடியாகவும், மற்றவை அடுத்தமாத முடிவிலும் கிடைக்கும். விபரங்கட்கு: பத்மநாதன், ஆஸ்பத்திரி, அச்சுவேலி. 2217

## உபவிழா ஆரம்பம்

சுழிபுரம், வியாழன்

வலிகாமம் மேற்கு சமாஜ உபவிழா போட்டிகள் ஏப்ரல் 12-ந் திகதி முதல் ஆரம்பமாகும். பேச்சுப்போட்டி, சம்பாஷணை ஆகிய நிகழ்ச்சிகளுடன் ஆரம்பிக்கப்படவிருக்கும் அன்றைய விழாவை வட்டுக்கோட்டை கிராம சபைத் தலைவர் முதலியார் திரு. செ. சின்னத்தம்பி ஆரம்பித்துவைப்பார் எனத் தெரியவருகிறது.

கொழும்புத்துறை
சந்திரசேகரப் பிள்ளையார் கோவில்
நிதிக்காக
"செல்வராஜ்"
பெருமையுடன் அளிக்கும்
"சட்டத்தின் கரங்கள்"
28-3-66 மாலை 6 மணிக்கு
யாழ். நகரமண்டபத்தில் நடைபெறும்
நீங்கள் வானொலியில் அரை குறையாகக் கேட்டு
மகிழ்ந்த துப்பறியும் நாடகத்தை
நேரில்காணும் சந்தர்ப்பத்தை தப்ப விடாதீர்கள்
கட்டணம்: 5/-, 3/-, 2/-
அனுமதிச் சீட்டுகள் யாழ்ப்பாணத்தில் பிரசித்திபெற்ற
வியாபாரிகளிடமிருந்து கிடைக்கும்
நாடகப் போட்டியில் கலந்துகொண்டு
வெகுமதிகளைப் பெறத் தவறாதீர்கள்
போட்டி விபரங்கள் மண்டபத்தில் அறிவிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டாக்டர் ரத்வத்தை மீது எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அதிருப்தி?

கொழும்பு, வியாழன்

இலங்கை முன்னாள் பிரதமர் திருமதி ஸ்ரீமா பண்டாரநாயகாவின் சகோதரர் டாக்டர் மக்கி ரத்வத்தையின் மீது லஞ்சக்குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளதைத் தொடர்ந்து எதிர்க்கட்சி எம். பி.க்கள் சிலர் டாக்டர் ரத்வத்தை மீது அதிருப்திகொண்டு எதிர்க்கட்சித் தலைவரின் அந்தரங்கக் காரியதரிசி பதவியிலிருந்தும் அவர் ராஜினாமாசெய்ய வேண்டுமென்று கருதுகின்றனர் எனத் தெரியவருகிறது.

இதுசம்பந்தமாக எதிர்க்கட்சி எம். பி.க்கள் ஒருகூட்டத்தைக் கூட்டி அதில் கலந்தாலோசிப்பார்களெனவும் கூறப்படுகிறது.

டாக்டர்கள் ரத்வத்தையினதும், ஏ. சிவரத்தினத்தினதும் தாக்கல்செய்யப்பட்டுள்ள லஞ்சக் குற்றச்சாட்டு வழக்கு ஏப்ரல் மாதம் 6-ந் திகதி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்படும்.

## 'சேக்கிழார் மன்றம்'

யாழ்ப்பாணம், வெள்ளி

சேக்கிழார் மன்றம் நிறுவும் நோக்கமாக நாளை பிற்பகல் 4-30 மணிக்கு வண்ணை பொன்னப்பா ஒழுங்கையில் உள்ள யோகபவனக்கலைக்கழகத்தில், காணி, நீர்ப்பாசன மின்சாரப்பகுதி நிரந்தரக் காரியதரிசியாகிய திரு. ம. ஸ்ரீகாந்தா தலைமையில் ஒரு கூட்டம் நடைபெறும்.


REGAL—JAFFNA
NOW SHOWING!
Sterling Hayden
In
FLAT TOP
(War Film Color)



ராஜா
(யாழ்ப்பாணம்)
2-00, 6-30, 9-45க்கு மட்டும்
கங்கா ஜம்னு
(ஹிந்தி)
4-45க்கு மட்டும்
பியூட்டீஸ் பை நைட்


## வடபகுதி . . .

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பாய் வெங்காயம், உருளைக்கிழங்கு, மிளகாய் முதலான உபஉணவுப் பொருட்கள் உற்பத்தியையும் பார்வையிடக்கூடும்.

6-ம் திகதி யாழ்ப்பாணம் கச்சேரியில் காரியாதிகாரிகள், உணவு உற்பத்தி அதிகாரிகள் கலந்துகொள்ளும் மகாநாட்டில் அமைச்சர் திரு. பண்டா, 1966—70 ஆண்டுக்கிடையில் இலங்கையின் சுயதேவைக்கு ஏற்ற அளவில் உபஉணவுப் பொருட்களை யாழ்ப்பாண விவசாயிகளால் உற்பத்தி செய்யமுடியும் என்பதனைப் பரிசீலனை செய்வார். வடபகுதியில் உணவு உற்பத்தி இயக்கத்தை அதிகரிக்கச் செய்யும் வகையில் அமைச்சரின் விஜயம் அமையக்கூடியதாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## தண்ணீர் பரிசோதனை தொடரும்

நல்லூர், வெள்ளி

கடந்த ஒருவருட காலமாக வடபகுதியில் நடத்தப்பட்டுவந்த நீர்பற்றிய பரிசோதனையை மேலும் ஒரு வருட காலத்திற்கு தொடர்ந்து செய்யும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

வடபகுதியிலுள்ள கல்லூரிகளில் உள்ள விஞ்ஞான ஆசிரியர்களால் இதுவரை காலமும் நடத்தப்பட்டு வந்த இந்தப் பரிசோதனை பற்றிய விபரங்கள் இம் மாதம் யாழ்ப்பாணம் கச்சேரியில் அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெறும் மகாநாட்டில் ஆராயப்படும்.

வடபகுதியில் விரைவில் ஏற்படக்கூடிய தண்ணீர் பஞ்சத்தைப் போக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமுகமாகவே இந்த நீர்ப் பரிசோதனை நடத்தப்பட்டு வருகிறது.


நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எஸ். எஸ ஆர். - விஜயகுமாரி
நடித்த
பூம்புகார்



இப்பொழுது நடைபெறுகிறது!
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30.
போயா நாட்களில் 4 காட்சிகள்.
சபையர் (வெள்ளவத்தை); விஜிதா (அட்டன்)
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ண (திருகோணமலை) மொடேர்ன் (பதுளை)
முத்துராமன், மனோகர், சந்திரகாந்தா, ராஜஸ்ரீ, பேபி ஷகிலா
நடிக்கும்
மொடேர்ன் தியேட்டர்ஸின்
அம்மா எங்கே?
விரைவில்
கெப்பிட்டல் (கொழும்பு)
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)
கடைசி வாரம்
சர்வர் சுந்தரம்


## யாழ். மேயர்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ஏ. நடராசா ஆமோதித்தார். இத்தீர்மானத்துக்கு ஆதரவாக ஒன்பது வாக்குகளும், எதிராக ஒரு வாக்கும் கிடைத்தன. மேயர் திரு. நாகராஜா உட்பட ஆறு அங்கத்தவர்கள் சபைக்கு வரவில்லை.

வாக்கெடுப்பு நடைபெற்ற சமயம், திரு. சுல்தானின் பெயர் ஏன் கூப்பிடப்படவில்லையென திரு. அல்பிரட் துரையப்பா கேட்டபோது, திரு. சுல்தான் ராஜினாமா செய்துவிட்டாரென கமிஷனர் தெரிவித்தார்.

ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்த ஒன்பது அங்கத்தவர்களும் காலை ஒன்பதரை மணிக்கு காரில் வந்தனர். மற்றும்சில அங்கத்தவர்கள் அங்கு காணப்பட்டபோதிலும் கூட்டத்திற்கு வரவில்லை.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்தவர்களில் திரு. ஏ. துரைராசசிங்கம் மட்டுமே கூட்டத்திற்கு வந்திருந்தார். கலரியில்பொது மக்கள் சிலரே காணப்பட்டனர். பொலிஸாரும் வந்திருந்தனர்.

தீர்மானத்தை ஆதரித்தவர்கள்: திருவாளர்கள். ஏ. ஜி. ராஜசூரியர், எம். எஸ். பேரின்பநாயகம், ஏ. ரி. துரையப்பா, ரீ. கந்தையா, ஏ. நடராசா, ரி. எஸ். துரைராசா, வி. எம். எம். அபுசாலி, கே. வி. தெய்வேந்திரன், என். அன்ரனி. தீர்மானத்தை எதிர்த்தவர் திரு. ஏ. துரைராஜசிங்கம்.

பாரபட்சமற்ற முறையில், கூட்டத்தை நடாத்தியதையிட்டு திரு. ஏ. ராஜசூரியர் கமிஷனர் திரு. ஹட்சன் செல்வராசாவைப் பாராட்டினார்.

## 1000 நெசவு . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி

சரசாலையில் ஒரு நெசவு நிலையத்தை நிறுவுவதுசம்பந்தமாக நடாத்தப்பட்ட ஆலோசனைக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு சொன்னார்.

ஆசிரியர் திரு. எம். கெங்காதரன் கூட்டத்திற்கு தலைமைவகித்தார்.

திரு. நவரத்தினம்மேலும் பேசுகையில் கூறியதாவது-:

ஒவ்வோர் நிலையமும் 25 பேருக்குப் பயிற்சியளிக்கும் ஒவ்வொருவருக்கும் பயிற்சி அளிக்கப்படும் காலத்தில் நாளொன்றுக்கு 1 ரூபா 50 சதம் கொடுக்கப்படும். எனவே பயிற்சிபெறும் ஒருவர் ஒரு மாதம் 40 ரூபா வரையில் பெறுவார். 25 பேரும் ரூபா 1000/- வரையில் பெறுவார்கள். பயிற்சி முடிந்ததும் மாதம் ரூபா150 தொடக்கம் 200 ரூபா வரையில் உழைக்கும் ஆற்றலைப் பெற்றவர்களாவர். இவ்வாறு ஒவ்வொரு தேர்தற் பிரிவும் பொருளாதாரத்தில் சிறக்க நாடு முழுவதும் பொருளாதார விருத்தி கூடிக்கொண்டேவரும்.

தென்மராட்சிக் காரியாதிகாரி திரு. இ. சிதம்பரப்பிள்ளை பேசுகையில், தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரே 'செய்யுந் தொழிலெல்லாம் சீர்தூக்கிப்பார்க்கின் நெய்யுந் தொழிலுக்கு நிகரில்லை' என்று கூறியிருக்கிறாரென்றும் நெசவுத் தொழிலின் மகத்துவம் மிகவும் மேலானதென்பது புலப்படுகின்றதென்றும் சொன்னார்.

ஆசிரியர் திரு. க. மயில்வாகனம் நன்றிகூறினார்.

சுழிபுரம், வியாழன்

சங்கானை மேற்கு பகுதியில் சிறு குழந்தைகளுக்கு அம்மைப்பால் கட்டும் வேலையில் சுகாதாரப் பகுதியினர் அதிக கவனம் செலுத்திவருகின்றனர். கடந்த இரண் [illegible] வேலை [illegible] நடைபெற்று வருகின்றது.

# திருப்பாடுகளின் ஒரு காட்சி




யேசுநாதரின் திருப்பாடுகள் சம்பந்தமான ஒரு நாடகக் காட்சியை யாழ்ப்பாணம்சம்பத்திரிசியார் கல்லூரிமாணவர்கள்எதிர்வரும் 26-ம், 27-ம் திகதிகளில் நடித்துக்காட்டவிருக்கின்றார்கள்.

கல்லூரி மைதானத்தில் நவீன ஒளி அமைப்புகளுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள 160 அடி நீளமான பெரிய மேடையில் நடிக்கப்படவிருக்கும் இந்தக்காட்சியில் சென்ற ஆண்டுகளை விட சில புதிய மாற்றங்கள் செய்யப் பட்டிருப்பதாகவும் சிறந்த அம்சங்கள் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் தெரிகின்றது.

இருதினமும் மாலை 7 மணிக்கு ஆரம்பமாகி 9-30 மணிவரை நடைபெறும். இந்நிகழ்ச்சியைப் பார்த்துப் பின் தமது இல்லங்களுக்குச் செல்வோர்க்கு விசேஷ பஸ் போக்குவரத்து வசதிகளும் செய்யப்பட்டிருப்பதாக அறியப்படுகின்றது. காட்சி நடைபெறும் வேளைகளில் யாழ்ப்பாணம் பஸ்நிலையத்திற்கும் கல்லூரி மைதானத்துக்குமிடையில் பஸ்சேவை நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். திருப்பாடுகள் நிகழ்ச்சியின் ஒரு காட்சியை மேலேயுள்ள படத்தில் காணலாகி.

## பாம்புக் கடிக்கு பலியானவர் சடலம் கோரப்படவில்லை

யாழ்ப்பாணம், வெள்ளி

மட்டக்களப்பைச்சேர்ந்ததாகக் கூறப்படும் செல்வராஜா என்பவர் பூநகரியில் உள்ள பல்லவராயன்கட்டு எனுமிடத்திலுள்ள பாடசாலைக்கட்டட வேலையொன்றில் கடமையாற்றிவந்த சமயத்தில் இம்மாதம் 17-ம் திகதி பாம்பொன்று அவரைத் தீண்டியதாகவும் அவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு ஆபத்தானநிலையில் கொண்டுவரப்பட்டு அனுமதிக்கப்பட்டு 22-ம் திகதி மரணமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவரது சடலம் இன்னும் கோரப்படாதிருப்பதாகவும் இன்று மரணவிசாரணை நடைபெறவிருப்பதால் மரணமானவரைத் தெரிந்தவர்இருப்பின் மரணவிசாரணையின்போது சமூகமளிக்கும்படி யாழ்ப்பாணம் பொலிசார் அறிவித்துள்ளனர்.

காலஞ்சென்றவர் சுமார் 5 அடி 2 அங்குல உயரமுள்ளவரென்றும் கறுப்பு நிறமுடையவர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## யோகர் சுவாமிகள் குருபூசை

நல்லூர், வெள்ளி

ஸ்ரீயோகர் சுவாமிகளின் இரண்டாவது குருபூசைத் தினமான எதிர்வரும் 1-ம் திகதி காலை 5 மணிக்கு சிவதொண்டன் நிலையத்திலிருந்து ஊர்வலம் புறப்பட்டு நல்லூர் வழியாக கொழும்புத்துறை நோக்கிப் புறப்படும். யோகர்சுவாமிகளின் நற்சிந்தனைப் பாடல்களுடன் பஜனை நடைபெறும். நண்பகலில் கொழும்புத்துறை ஆச்சிரமத்தில் அன்னதானம் வழங்கப்படும்.

## சமயப்பிரசங்கங்கள்

இன்று வெள்ளிக்கிழமை மாலை 7மணி முதல் அகில இலங்கைப் பொதுஜன சேவைச்சங்க ஆதரவில்பின் வரும் தேவஸ்தானங்களில் பிரசங்கங்கள் நடைபெறும். நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்' திரு. த. சுப்பிரமணியம், ''திருஞானசம்பந்தர்', என்னும் பொருள் பற்றியும், நீராவியடி கடையிற்சாமி தேவஸ்தானத்தில் திரு. பொ. பாலசுப்பிரமணியம் ''கண்ணப்பநாயனார்'' என்னும்பொருள் பற்றியும் நல்லூர் கிழக்கு மூத்தவிநாயகர் ஆலயத்தில் பண்டிதர் இரா. சுப்பிரமணியம்' குங்குலியக்கலயநாயனார்' என்னும் பொருள்பற்றியும் பிரசங்கங்கள் நிகழ்த்துவார்கள்.

## வயோதிபர் மரணம்

வல்வெட்டித்துறை, வியா.

தொண்டமானாறுசெல்வச்சந்நிதி ஆலயத்தைச் சேர்ந்த கந்தசாமிஐயர் மடத்தில் காங்கேசன்துறையைச் சேர்ந்த நாகப்பர் சின்னப்பர் (87 வயது) என்பவர் இறந்துகிடக்கக் காணப்பட்டார்.

## 600 பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், வெள்ளி

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு கண்நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக டாக்டர் விசுவலிங்கம் தலைமையில் வந்திருந்த 6 பேர் கொண்ட டாக்டர் கோஷ்டி இங்கு பல பகுதிகளுக்கும் விஜயம் செய்து 600 பேருக்குமேற்பட்ட நோயாளர்களுக்கு சிகிச்சை அளித்துள்ளது.

(ந. நி)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் [illegible]-ம் ஆண்டு மார்ச் மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org